அன்பளிப்பு
உ R.G. துரைப்பாண்டி B.A.,
கோச்சடை, மதுரை.

திருச்சிற்றம்பலம்

துவம்பதார்த்த இலட்சிய

அநுபவ ஆராய்ச்சி விளக்க

வினா விடைச் சுருக்கம்.

திருத்துருத்தி இந்திரபீடம்,
கரபாத்திர சுவாமிகள் ஆதீனம்
ஸ்ரீமான் தண்டறை
சுப்பராய ஆசாரிய சுவாமிகள்
மாணாக்கரில் ஒருவரும்,
மதுரை, ஸ்ரீ மீனாம்பிகை பிரஸ்
மானேஜருமான

எஸ். கந்தசாமி பிள்ளை

தமது சற்குரு நாதன்
சுவாநுபூதியில்
எழுந்ததை
வினா விடையாகச்
சுருக்கி எழுதியது.

மதுரை, ஸ்ரீ மீனாம்பிகைப் பிரஸில்,
பதிப்பிக்கப் பெற்றது.

காப்பிரைட்] 1927. [விலை அணா 3.

அசிபத இலட்சியானுபவம்.

வெண்பா.

உருவமெலா முற்றுணரி லோயா வெளியாம்
அருவாம் வெளியி லழுந்தித்—திரிபின்றி
ஆயுங்காற் சங்கற்ப மன்றி யிலையதனை
ஆயுங்கால் மெய்யுணர்வே யாம்.

மெய்யுணர்வை யுற்றுணரில் மேல்கீழொப் பின்றியே
ஐயந் திரிபின் றகன்றொளிரும்—பையப்
பழகப் பழகப் பறக்குந் துயர்கள்
பழயபற் றோடே பணிந்து.

அதுநானென் றொரு மனுபவமீ தூர
அதுநழுவி நானதுவா மப்பால்—எதுவுமல
தாகிமன வாக்குக் கடங்காது நிற்பதுதா
னொருநிலை முத்திமுடி வாம்.

நானெனற்கு மெய்வடிவம் ஞானமே வேறில்லை
ஏனையவை பொய்வடிவ மீங்கழியும்—ஞானமதைக்
கண்டதுவா நின்றக்காற் காணுமோ சாவச்சம்
பண்டுருத்தா னாகியதாற் பண்பு.

அன்றல்ல வாமல்ல வப்பாலிப் பாலல்ல
நன்றல்ல தீதல்ல நானுமல—ஒன்றுபல
அல்லவென நின்ற ததுவாதல் முத்திநெறி
யில்லையே யெம்மதத்து மே.

இவ்வண்ணங் கண்ட விவன்றன் னனுபவத்தை
யெவ்வணமுங் கோணா தியம்பியே—செவ்விதா
யேத்திக் குருபரனை யேகித் தனதிடத்தில்
நீத்திருந்தான் கற்பனைக ளின்று.

முற்றிற்று.

முகவுரை.

“ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயனின்றே மெய்யுணர் வில்லாதவர்க்கு” என்ற தெய்வப் புலவர் திருவாக்கின்படி ஆராயப்புகின் “மெய், வாய், செவி, கண், மூக்கு ஆகிய பஞ்சேந்திரியங்களின் வாய் முறையே நுகரப்படுகின்ற ஊறு, சுவை, ஓசை, ஒளி, மணம் முதலிய வேறுபாட்டு வெளியனுபவங்களை அறவே அவ்வவ் விந்திரியங்களின் வா யவித்தடக்கி நின்றவருங்கூட மெய்யுணர்வு இல்லாதவர்களானால், அந்த ஐம்பொறியையும் அடக்கி ஆட்கொண்ட அவ்விடத்துங்கூட அவர் பயன்பெறாதவராவர்” என்பது புலனாகின்றது.

உள்ளமின்றி உலகின்றாதலின் அவ் உள்ளமே உலகென ரச்சு சர்ப்பம்போல் தடித்து அவ் உலகமென்கிற தோற்றம் உள்ளத்தினுள் பாம்பு கயிறாவதுபோல் ஒடுங்கி, அவ்வுள்ளமே நிறையுணர்வாய் முடிவில் ஓர் ஒப்புயர்வற்ற உணர் வெளியாகின்றதென்பதே அத்வைத முடிவென்ப. இம்முடிவை ஞானவாசிட்டம் பாலன் கதை என்ற பாகத்தில் ‘மூவரிலிருவர்’ என்ற பாட்டின் துவக்கத்தில் பரக்கக் காணலாம். என்றாலும் இதனைச் சுருக்கியும், விளக்கியும், குருசிஷ்ய சம்பாஷணையாகத் தெற்றெனத் தெளித்துக் காட்டுகின்ற “துவம்பதார்த்த இலட்சிய அநுபவ ஆராய்ச்சி விளக்க வினாவிடைச் சுருக்கம்” என்னும் பெயரிய இச்சிறு நூல் யாம் முன்னர்க் கூறியாங்குள்ள பரிபாகிகளுக்கு மின்றியமையாததாக ஆவசியப்படுவதுடன் பரிபாகிகளாக முயல்வார்க்கும் ஓர் தூண்டுகோலாகித் துலங்குகின்றதாகவே இவ்விருபாலரும் பயன்பெறுமாறு இதனைத் தனியே வகுத்து நன்கு பரிசோதித்துச் சுத்தப் பிரதியாக வெளியிடத் துணிந்தேம். இதனை யாம் வெளியிடுங்கால் எமக்கொரு துணையாயிருந்து எம்மோடொத்துழைத்து இம்மட்டேனும் இது வெளிப்போந்தற்குதவிய எமது நண்பர் மதுரைத் தமிழ் வித்வான், ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் நன்றியை எமதுள்ளம் என்றும் மறவாது.

இங்ஙனம்

எஸ். கந்தசாமி பிள்ளை,

மானேஜர்,

ஸ்ரீ மீனாம்பிகை பிரஸ்,

மதுரை.

திருச்சிற்றம்பலம்.

பிரமாநுபூதி விளக்கம்.

தனைத்தவிர வேயொன்றைத் தான்வேறாய்க் கண்டுவிடிற்
பினைச்சென்ம நீங்காது பிரமாநு பவமலவே. ௯

தன்னைவிட வேறொன்றுந் தானில்லாத் தன்னிடத்தில்
தன்னினைவி னாலே சகம்போலத் தோன்றிடுமே. ௰

எங்குஞ் சிதம்பரமா யெங்கும் நிறைந்திருக்கத்
தங்குநினை வாலஃதே சகம்போலத் தோன்றிடுமே. ௧௧

தங்கு நினைவதனைச் சாராது நீக்கிடத்தில்
எங்குஞ் சிதம்பரமா யிருளறவே கண்டனமே. ௧௨

மந்தவிரு ளிற்கயிறு மாசுணம்போற் றோன்றுதலி
னிந்தவுல கென்னிடத்தி லிலகுமா ரோபிதமாய். ௧௩

பழுதையினின் றோர்சத்தி பாம்புபோற் றோன்றுதற்குப்
பழுதையினுண் டதைப்போலப் பரத்தினுமுண் டோர்சத்தி. ௧௪

சூனியஞ்சித் துப்பிரமஞ் சுத்தசிவம் பரமென்று
தானிகழ்தல் வேறில்லை தனக்கே பரியாயம். ௧௫

சங்கற்ப சத்தியினாற் சகம்போலத் தோன்றியிடும்
சங்கற்ப சத்தியதும் தன்னைவிட வேறில்லை. ௧௬

தன்சத்தை யேயுண்டாய்த் தானிருக்கு மெப்போதுந்
தன்சத்தை தன்னிற் சகத்திற்குத் தானிருப்பே. ௧௭

தன்சித்தே தோன்றித் தான்விளங்கு மெப்போதுந்
தன்சித்தி னாலே சகமும் விளங்கிடுமே. ௧௮

தன்னின்பே யின்பாய்த் தானிருக்கு மெப்போதுந்
தன்னின்பி னாலே சகமின்பாய்த் தோன்றிடுமே. ௧௯

தானாய்ப்பார்த் திடுமிடத்திற் சகலமுந்தா னாய்த்தோன்றுந்
தானாய்ப்பா ராவிடத்திற் சகலமும்வே றாய்த்தோன்றும். ௨௫

தனைத்தவிர வேறொன்று தான்காணி லவனுக்குப்
பினைப்பயமும் போகாது பெரும்பயமும் நீங்காது. ௨௬

தன்னினைவி னாலே சகமாய் விரிந்ததெனத்
தன்னினைவை நீங்கித் தானா யிருந்தனமே. ௨௭

உண்டா யொடுங்குவது முண்டான தன்னிடத்தே
யுண்டாகு மென்றே யொடுங்கி யிருந்தனமே. ௨௮

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

துவம் பதார்த்த இலட்சிய

அநுபவ ஆராய்ச்சி விளக்க

வினவிடைச் சுருக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சியினி லென்று மிருப்புளதாச்
சிந்தை வியாபகமே தேர்ந்தொளிரும்—வந்த
பரிபா கிகளாகப் பாங்குடையோர்க் கொன்றுந்
திரமில்லார்க் கொவ்வாதித் தேன்.

குரு வின. தூலபாவமாக விளங்கும் நமக்கு முன் பார்த்த காலம், தேசம், வஸ்துக்களை இப்பொழுது நினைக்குந் தோறும் தோன்றுகின்றனவா?

சீடன் விடை. தோன்றுகின்றன.

கு. வின. அப்படித் தோன்றுவது முன் பார்த்தவைகளா? அல்லது வேறாக இருந்து தோற்றுவதா?

சீ. விடை. முன் பார்த்தவைகளே இப்பொழுது தோன்றுகின்றன.

கு. வின. அப்படித் தோற்றப் பட்டவைகளுள் ஒன்றை ஆராய்ந்து பார்ப்போமா?

சீ. விடை. ஆராய்ந்து பார்ப்போம்.

கு. வினு. ஓர் பர்வதமானது இத்தூல பாவமாக நின்று உணரும் நமக்குச் சமீபத்தில் வந்ததுண்டா? அல்லது அதன் சமீபத்தில் நாம் போனதுண்டா?

சீ. விடை. இல்லை.

கு. வினு. பர்வதமாகத் தோன்றுவது யாது?

சீ. விடை. முன் பார்த்ததைப் போலவே தோற்றுகிறது.

கு. வினு. இப்பர்வதத்தைப்போல் அண்டாண்ட சராசரங்களனைத்தும் தோற்றல் மாத்திரமாகக் காணப்படுகின்றனவல்லவா?

சீ. விடை. ஆம். காணப்படுகின்றன.

கு. வினு. இவை அனைத்தும் எங்கே காணப்படுகின்றன?

சீ. விடை. ஓர் நினைவில் காணப்படுகின்றன.

கு. வினு. அந்நினைவு எந்த அளவாயிருக்க அண்டாண்ட சராசரங்களும் தோற்றுகின்றன?

சீ. விடை. நினைவு அகண்டமாயிருக்க அதில் காணப்படுகின்றன.

கு. வினு. அவ்வகண்டம் வெளியெனப் படுமென்றோ?

சீ. விடை. ஆம். வெளியெனப்படும்.

கு. வினா. மேற்படிபர்வதம் உயரத்திலும், நீட்சியிலும், அகலத்திலும் இவ்வளவென்று இருக்கின்றதல்லவா?

சீ. விடை. ஆம். இருக்கிறது.

கு. வினா. இவ்வளவையுடைய இப்பர்வதம் பத்துத் திக்குகளையுடையதா அல்லவா?

சீ. விடை. ஆம். தச திக்குகளையுடையதுதான்.

கு. வினா. இத்தசபுறங்களிலும் யாதிருக்கின்றது?

சீ. விடை. ஒன்றுமில்லை.

கு. வினா. ஒன்றும் இல்லாமை யென்பது வெளியெனப்படாதோ?

சீ. விடை. ஆம். வெளியெனப்படும்.

கு. வினா. இப்பர்வதத்தின் தசபுறத்துள் ஓர் புறத்திலுள்ள வெளியை நமது அக திருஷ்டியானது நாடிச் செல்லச்செல்ல எட்டாமல் போகுமன்றோ?

சீ. விடை. ஆம். எட்டாமலே போகிறது.

கு. வினா. முடிவு எட்டுகிறதா?

சீ. விடை. முடிவு எட்டவில்லை.

கு. வினா. இப்படியே ஒவ்வொரு புறமும் இருக்கின்றதல்லவா?

சீ. விடை. ஆம். ஒவ்வொரு புறமும் அப்படித் தான் இருக்கிறது.

கு. வினு. எட்டாவிட்டால் எல்லை கடந்து இருக் கின்றதல்லவா?

சீ. விடை. ஆம். எல்லை கடந்திருக்கிறது.

கு. வினு. இதனுல் அவ்வெளியானது கிழக்கு முதலிய தசவித திக்குகளையும் ஏற்குமா?

சீ. விடை. ஏற்காது.

கு. வினு. எங்கும் ஏகவெளியாய் இருக்கின்ற தல்லவா?

சீ. விடை. ஆம். எங்கும் ஏக வெளியாயிருக்கிறது.

கு. வினு. புறமென்பதை ஏலாத இவ்வெளியா னது உள் என்பதை ஏற்றற்கியையுமா?

சீ. விடை. ஏற்றற்கியையாது.

கு. வினு. உள்ளும் புறமும் அற்றிருக்கினும் இடைப்புறமேனும் ஏற்குமா?

சீ. விடை. இடைப்புறமும் ஏற்காது.

கு. வினு. ஆனுல் நிரந்தர முற்றிருக்கின்ற தல் லவா?

சீ. விடை. ஆம் நிரந்தர முற்றிருக்கின்றது.

கு. வினு. இம்முப்புறமும் அற்றிருக்கின்றதாயின் மேற்படி நினைவாகிய இவ்வெளி ஆதி மத்தியாந்தரகிதமெனப்படுமல்லவா?

சீ. விடை. ஆம். ஆதிமத்தியாந்த ரகிதமெனப் படும்.

கு. வினா. இதனை உற்று நோக்கினாலல்லவோ இஃது உண்மையென்றும் அன்றென்றும் விளங்கும். அப்படி நோக்காத வரை இஃது ஓர் கதைபோல் முடியும். இங்ஙனமாகிய பரிபூரண வியாபகத்திலன்றோ மேற்படி தோற்றன் மாத்திரமாகிய இப்பர்வதம் போன்ற அண்டாண்ட சராசரங்களும் தோன்றுகின்றன?

சீ. விடை. ஆம். இப்பரிபூரண வியாபகத்திலே தான் தோன்றுகின்றன.

கு. வினா. இங்ஙனம் தோற்றப்பட்டவற்றுள் இப்பர்வதம் தோற்றும்பொழுது மற்ற நாம ரூபங்கள் உண்டா?

சீ. விடை. மற்ற நாம ரூபங்கள் தோன்றவில்லை.

கு. வினா. மற்றவற்றுள் ஒன்று தோன்றும்பொழுது இப்பர்வதமுண்டா?

சீ. விடை. இப்பர்வதம் தோன்றவில்லை.

கு. வினா. இல்லையென்றால் எங்கே போயிற்று?

சீ. விடை. எங்கும் போகவில்லை, நசித்து விட்டது.

கு. வினா. நசித்தபின் அப்பர்வதம் யாதுபொருளாய் முடிகின்றது?

சீ. விடை. இல்லாமற்போய் விடுகின்றது.

கு. வினா. இல்லாமையென்பது சூனியமல்லவோ?

சீ. விடை. ஆம். சூனியந்தான்.

கு. வினா. சூனியத்திற்கு ஆதாரம் இவ்வெளியல்லவா?

சீ. விடை. ஆம். அகண்ட வெளிதான்.

கு. வினா. அப்பர்வதம் வெளியாய் விடுகின்றதல்லவா?

சீ. விடை. ஆம். வெளியாய் விடுகின்றது.

கு. வினா. இஃது எதுபோல் ஆய் விடுகிறது?

சீ. விடை. ஆலாங்கட்டி நீரானது போலும், உப்பானது அப்பானது போலும் அரவு கயிறானது போலும் ஆய் விடுகின்றது.

கு. வினா. உப்பு முதலிய மூன்றும் நீர் முதலிய மூன்று முடிவானேன்?

சீ. விடை. நீரும் கயிறும் அவ்வுப்பாதிகளாக ஆனமையால் மீண்டும் அவைகள் தத்தம் உபாதான காரணமாயாகின்றன.

கு. வினா. இவற்றைப்போல் மேற்படி பர்வதம் தனக்காதாரமாகிய வெளியாவானேன்?

சீ. விடை. இவ்வெளியே மேற்படி பர்வதமாக ஸ்புரித்தமையால் மீண்டும் அஃது தனது உபாதான காரணமாயாகின்றன.

கு. வினா இங்ஙனமே, அவ்வெளியின்கண்தோன்றும் அண்டாண்டசராசரங்களும் தோன்றும் பொழுது தோன்றி மீண்டும் அவ்வெளியாகவே முடிகின்றதல்லவா?

சீ. விடை. ஆம். அவ்வெளியாகவே முடிகின்றது.

கு. வினா. சலமானது தனது அகண்ட வியாபகத்தில் தானே ஏகதேசமாய் அலையாதிகளாக ஸ்புரித்து, விளங்கி, ஒடுங்கித்தானாய்முடிவதுபோல, இவ்வகண்ட வெளியானது தனது பரிபூரண வியாபகத்தில் தானே ஏகதேசமாய் 'நான் நீ அவன் அவள் அது' என்கிற திணை பால் இட முதலிய அனந்தநாம ரூபங்களாக ஸ்புரித்து விளங்கி ஒடுங்கித் தானாய் முடிந்து விடுவதனைத்தும் பிரத்தியக்ஷமன்றோ?

சீ. விடை. ஆம். பிரத்தியக்ஷந்தான்.

கு. வினா. இப்படியிருப்பதால் மேற்படி தோற்றங்களாகிய சர்வத்துக்கும் இவ்வெளியாகிய தானே அகண்ட வியாபகமாயிருப்பதுமன்றி உபாதான காரணமாயுமிருப்பது சத்திய மல்லவோ?

சீ. விடை. ஆம். உபாதான காரணமாயுமிருக்கின்றது.

கு. வி. அவ்வெளியாகிய தன்னிடத்தில் சமட்டியாகவும், வியட்டியாகவும் எதற்குக் காணப்படுகின்றன?

சீ. விடை. ஓர் அறிவுக்குக் காணப்படுகின்றன.

கு. வி. அறிவுக்கு ஏன் காணப்படுகின்றன?

சீ. விடை. தம்மை அறிகின்றதற்குக் காணப்படுகின்றன.

கு. வி. இத்தோற்றங்களாகிய தம்மை யறியும் அறிவு எங்கிருக்கிறது?

சீ. விடை. இத்தூல சரீரத்தில் நின்றறிகின்றது.

கு. வி. இத்தூல சரீரம் பஞ்சபூத ஆராய்ச்சியில் ஓர் முதலெனப்படுமோ?

சீ. விடை. காரண காரிய ஆராய்ச்சியில் இத்தூல சரீரம் ஓர் முதலெனப்படாது.

சீ. வி. இத்தூலதனுவை ஓர் முதலெனக் கொண்டது அவ்வாராய்ச்சி வழியில் நில்லாத அறியாமையல்லவா?

சீ. விடை. ஆம். அறியாமையே.

கு. வி. இவ்வறியாமையை மிக்க ஆப்தமாகத் தழுவியிருக்கும் வரையில் நமதுஎதார்த்தவடிவம் வெளிப்படுமோ?

சீ. விடை. ஆம். நமது உண்மை வடிவம் வெளிப்படாது.

இது நிற்க.

கு. வி. இப்பொழுது காணப்படும் இப்பர்வ தமானது உருவம், அருவம், ரூபா ரூபம் இம்மூன்றில் எவ்வடிவமாகத் தோன்றுகிறது?

சீ. விடை. ரூபாரூபமாகத் தோன்றுகிறது.

கு. வி. இதை அறியும் அறிவு எந்த ரூப மாயிருந்து அறிகிறது?

சீ. விடை. தூலபாவமாயிருந்து அறிகிறதுபோல் தோன்றினும் ஆராய்ச்சியில் உருவா ரூபமாயிருந்து அறிகிறது.

கு. வி. உருவாரூவ வடிவமாக நின்றறிகின்ற அறிவு எங்கிருப்பது?

சீ- விடை. மேற்படி பர்வதத்துக்கு ஆதாரமாகிய வெளியின்கண்ணே இருக்கின்றது.

கு. வி· இப்பர்வதம் நான்கு திசையில் ஏதோ ஓர் திசையில் தோன்றுகின்ற தல்லவா? எந்தத் திசையில் தோன்றுகிறது?

சீ. விடை. கீழண்டைப் பாரிசத்தில் தோன்று கிறது.

கு. வி. அப்பாரிசத்தை அறிகிற அறிவு எப் பாரிசத்தில் நிற்கின்றது?

சீ. விடை. அக்கிழுண்டைப் பாரிசத்திலேயே நிற்கின்றது.

கு. வினா. அப்பாரிசத்தில் சமீபத்திலாவது தூரத்திலாவது நின்றறிகின்றதல்லவா?

சீ. விடை. ஆம். சமீபத்திலாவது தூரத்திலாவது நின்றறிகின்றது.

கு. வினா. அப்படி அறிகின்ற அறிவுக்கு நிசரூபம் ரூபாரூப வடிவந்தானோ?

சீ. விடை. ஆம். ரூபாரூப வடிவந்தான்.

கு. வினா. அப்படியானால் சாக்கிரமாகிய இந்நனவில் காணப்படுகிற இவ்விருட்சத்தை அறிகின்றது எது? அப்பர்வதத்தை அறிந்த அறிவல்லவோ?

சீ. விடை. ஆம். நினைவில் தோன்றிய அப்பர்வதத்தை அறிந்த அறிவே இந்நனவில் இவ்விருட்சத்தை அறிகின்றது.

கு. வினா இவ்விருட்சம் உருவமா? அன்றி வேறா?

சீ. விடை. உருவந்தான்.

கு. வினா. நாம ரூபங்களை இந்நனவில் அறியும் பொழுது உருவ பாவமாயும், அகத்தில் அதாவது நினைவில் மேற்படி நாம ரூபங்களை ரூபாரூபமாக அறியும்

பொழுது உருவா ரூப பாவமாயும் நின்
றறிகின்றதல்லவா?

சீ. விடை. ஆம். அப்படித்தான் அறிகின்றது.

கு. வி௵. இவ்விரண்டிடத்தும் அறிகின்ற அறி
வுக்கு நிச ரூபம் எப்படி இருக்கிறது?

சீ. விடை. இவ்விரண்டுமாயே யிருக்கிறது.

கு. வி௵. அப்படியானால், தான் உருவமாயிருந்து
விருட்சத்தை அறியும்பொழுது உரு
வாரூபம் இல்லாமலும், உருவாரூபமா
யிருந்து பர்வதத்தை அறியும்பொழுது
உருவமும் இல்லாமற்போகின்றன. இங்
ஙனம் ஒன்றில் ஒன்று இல்லாமற்
போகின்றதால் அன்னியோன்னியா
பாவமென்பார்கள் அறிஞர்கள். ஆன
தால் மேற்படி பர்வதத்தை அணிமை
யாகவும், சேய்மையாகவும் அறிவது
போற்காண்பது தனது உருவாரூப பேத
பாவத்தாலன்றோ! அன்றெனின் தான்
இப்பர்வதத்தை அறிவது எங்கிருந்
தெனவரும். ஆதாரமாகிய வெளியின்
கண்ணெனின் அவ்வெளியில் இப்பர்
வதம்போன்ற நாம ரூபங்களை எங்
கெங்கே எவ்வெப்பொழுது ஸ்புரித்துக்
காணப்படுகின்றனவோ, அங்கங்கே

அவ்வப்பொழுது அறிகின்றது. அங்ஙனம் அறிகின்ற அறிவு உருவாரூப பாவம்போல் ஆரோபிதப் பட்டமையால் ஒவ்வோர் பாரிசத்தில் நின்று அறிகின்றதாய்த் தோன்றுகின்றதேயன்றி உண்மையில் அங்ஙனம் இல்லவே இல்லை. இல்லையேனும் அறிவது உண்மையாதலின் எங்கிருந்து அறிகின்றது?

சீ. விடை. அவ்வியாபகத்தில் எங்கெங்கே தோற்றுகின்றதோ அங்கங்கே நின்று அறிகின்றது.

கு. வினா. ஒன்றும் தோன்றாதபொழுது எப்படியிருக்கிறது?

சீ. விடை. தான் இருந்தே அத்தோன்றாமையையும் அறிந்துகொண்டிருக்கிறது.

கு. வினா. இதனால் அறிவென்பது அவ்வெளி முழுவதும் நிறைவென்பதாயிற்றா?

சீ. விடை. வெளிமுழுதும் அறிவு நிறைவாயிருக்கின்றது.

கு. வினா. ஆகவே அவ்வெளியையன்றி அறிவென்பதுண்டா?

சீ. விடை. வெளியையன்றி அறிவென்பதில்லை.

கு. வி௵. இல்லாததால் அவ்வெளியே தன்னில் தோற்றுவன யாவையும் தானே அறிகின்றதல்லவா?

சீ. விடை. ஆம். அறிகின்றது.

கு. வி௵. இதனுல் அவ்வெளியானது உணர் வெளியெனவும், அறிவானது நிறை யுணர்வெனவும் விளங்குகின்றதல்லவா?

சீ. விடை. ஆம். நிறையுணர்வெனவும், உணர் வெளியெனவும் ஆகின்றது.

கு. வி௵. இவ்வெளியில் சோம சூரியாக்கினி யென்பவை இல்லையே, இல்லாததால் இப்பர்வத முதலிய சராசரங்களும், எந்த விளக்கத்தால் விளங்கப்படு கின்றன?

சீ. விடை. தற்பிரகாசமாகிய விளக்கத்தால் விளங் கப்படுகின்ற தென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

கு. வி௵. நாம் விளக்க வடிவமாயிருக்க அவ்வி ளக்கம் விளங்காத தென்னவென்ருல், உருவம் உருவாருபமாகிய சராசரங்களா கப் பார்க்கும் பார்வையே அவ்விளக் கம் விளங்காததுபோ லிருப்பதற்குக் காரணமன்றி வேறில்லை. அவ்விளக்கம் விளங்காத காலமுமுண்டோ? சதோ

தயமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதல்லவா?

சீ. விடை. ஆம். சதோதயமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

கு. வி௫. சராசரங்களாகத் தோற்றுவதும் அவற்றைப் பார்க்கும் பார்வையும் இல்லாத பொழுது (அதாவது சுழுத்தியவத்தை) அவ்விளக்கம் விளங்கப் படலாமே யெனின் அவ்வுருக்களை அறிந்து கொண்டிருக்கும்பொழுது அவ்வுருக்கள் ஒருங்கே மறைந்துவிடுவதால் அந்நாட்டத்துக்கு அப்பாழே பலனாக முடியுமா? வேறு பலனாக முடியுமா?

சீ. விடை. பாழேதான் பலனாக முடியும்.

கு. வி௫. ஆனால் அப்பாழை எப்படிக் கடப்பது?

சீ. விடை. உருக்கள் தோன்றும்பொழுதே அவ்வுருக்களைக் காரண காரியங்களாய் விசாரித்து மித்தையானுபவமாக்கித் தன்னை எட்டியுணர்ந்தால் அம்மாறுத அவ்வறிவு விளக்கம் புலப்படும்.

கு. வி௫. அங்ஙனம் அவ்வுழைப்பின்றி உருக்களையே பலனாக நாடும்பொழுது அவ்வுருக்களாகத் தோன்றும் விர்த்திகள் இடையிடையே அயர்வுறு மல்லவோ?

சீ. விடை. ஆம். அந்தந்த நாமரூப விர்த்திகள் இடையிடையே அயர்வு உண்டாகும்.

கு. விஞ. அவ்வயர்வு உருக்களைப் பலனுக நாடிய நாட்டத்துக்கு யாதாய் முடியும்?

சீ. விடை. பாழாய்த்தான் முடியும்.

கு. விஞ. எப்படியென்றுல் இதற்கு ஓர் அனுபவ திருஷ்டாந்தத்தின் வழியாக விஞவுகிரேம். இரவில் பலர் சூழ்ந்த மிக்க வியப்புறும் ஓர் அரிய நாடக மேடையினின்று நடனமாடிவரும் பல வேடங்களும் எவ்விளக்கத்தால் விளங்குகின்றன?

சீ. விடை. ஓர் தீபப் பிரகாசத்தால் விளங்குகின்றன.

கு. விஞ. அத்தீபப் பிரகாசத்தில் தோன்றும் நாஞவித வேடிக்கைகளும் மிக்க இன்புருவமாகத் தோன்றுவானேன்?

சீ. விடை. இன்புருவாகப் (அதாவது பலனுகப்) பார்ப்பதால்.

கு. விஞ. அங்ஙனம் பலனுகப் பார்க்கும்பொழுது அப்பலனுன உருவம் அனைத்தும் ஒருங்கே மறையும்பொழுது அப்பார்வைக்கு ஒன்றுமில்லையென்ற பாழே பலனுக முடியுமா? அல்லது அவ்வு

ருக்களை விளக்கிவைத்த ஒளி பலனாக முடியுமா?

சீ. விடை. ஒன்றுமில்லை யென்ற பாழ்தான் பலனாக முடியும்.

கு. வின. ஆனால் ஷ நாடகம் நடிக்கும்பொழுதே அவ்வேடங்களைப் பலனாக நாடிய நாட்டத்தைவிட்டு அவ் வேடங்களை விளக்கிக்கொண்டிருந்த ஒளி வியாபகத்தை நாடிக்கொண்டிருந்தால் வேடங்கள் மாறியபொழுதும் மாறாதபொழுதும் அந்நாட்டத்துக்குப் பலன் அவ் விளக்கத்தை யன்றி வேறு உண்டெனப் படுமோ?

சீ. விடை. ஆம். அவ்வொளியைத் தவிர வேறு உண்டெனப்படாது.

கு. வின. இதுபோல் இந்நனவு நினைவு கனவுகளில் பலனாகத் (இன்புருவாக) தோன்றும் காலம் தேசம் வஸ்துக்களை நியதி களைந்து களைந்து செல்லின் முடிவிலிருப்பது வியாபக விளக்க உணர்வாகலின் அவ்வுணர்வெளி விளக்கத்தை விடாமல் நாடிக்கொண்டிருந்தால் காலம் தேசம் வஸ்துக்கள் மாறியபொழுதும் மாறாதபொழுதும் அந்நாட்டத்துக்குப்

பலன் அவ்வொளியை யன்றி வேறோர் பலன் (இன்பம்) உண்டெனப்படுமோ?

சீ. விடை. அந்நாட்டத்துக்குப் பலன் வேறொன் றும் உண்டெனப்படாது.

குரு. வினா. படாததால் நாம் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கவேண்டியது?

சீ. விடை. தாங்கள் இப்பொழுது அனுபவ ரூபமாய்த் தெரிவித்த மேற்படி வியா பக விளக்கத்தை நாடிக்கொண்டிருக்க வேண்டுமென்பதே மிக்க அவசியம்.

இதற்கு உதாரணம் திருக்குதிரிசிய விவேகம்.

வெண்பா.

நினைவன்றி யில்லை நிலையாகக் காணும்
நனவோ டுலகுண்மை நாட்டம்—நினைவுதனில்
காண்பனவா யங்குணர்வாய்க் காட்டுமொளி யாயிடமாய்க்
காண்பதனைக் கண்டுணர்ந்தக் கால்.

வியாபித்து நின்ற விளக்கம் நினைவாம்
நியாயத்தாற் காட்டினோம் நேரே—வியாபகத்தை
யன்றித் திரிபுடியின் றுதலா னவ்வொளியில்
நின்று கழிப்பாய் நிதம்.

நினைவாவ தெங்கு நிகரில்சிற் சோதி
யனையதேல் வேறுக்கி லாமோ—வனையதாக்
கண்டு படிப்பதே கல்விமற் றெப்படிப்பும்
தெண்டப் படிப்பாத் தெளி.

இம்முயற்சி மாறு தியற்றிற் சிதானந்தங்
கம்மித் தறிவுதயங் காணுமே—விம்மி
யதுவானுர் பாதத் தறிவிடய முட்க
ளெதுகாலுந் தைக்கா வினி.

அணுமகத்தைக் காட்டோ மகல்விசும்பைத் தள்ளி
நணுகுபந்த மேதென்று நாடோம்—பிணவாயாற்
பேச்சிற் சிறந்தோம் பெருவெளியாய் நில்லோமே
சீச்சீயிங் கென்னசெய்தோந் தின்று.

என ஆன்ருேர் மகாவாக்கியங்களையும் கவனிக்கவேண்டு மென்பதே திண்ணம்.

வியாபக விளக்க இலட்சியார்த்த நாட்டம் வந்தும் அந்நாட்டம் பரிபூரணமாக நிலைக்கும் வரையில் அஞ்ஞானம், சந்தேகம், விபரீத மென்னும் இம் மூன்றும் வந்து வந்து தாக்கும். தாக்குந்தோறும் அவற்றைக் கெடுத்தற்குக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் இம்மும்முயற்சியும் விடாது பலகாலும் நிகழ வேண்டுவது திண்ண மாதலால் மேற்படி பரிபூரண நாட்டம் எளிதில் வராதென்க. இது நிற்க.

தூலமுதல் அவித்தைகாறுமுள்ள வியட்டி தத்துவக்கூட்ட மனைத்தையும் அல்லை யென்றும் இல்லை யென்றும் பொருள்படுமாறு காரண காரிய நெறித்தாக ஆராய்ந்து சென்ற முடிவில் நின்று சதோதயமாய்ப் பிரகாசிப்பது மேற்படி வியாபக விளக்கமாதலால் நீ என்னும் தொம்பத

லெட்சியார்த்த கூடஸ்தனெனப்படுமோ? அன்றி வேறெனப்படுமோ? கூடஸ்த னெனப்படுமெனின் இவ்விளக்கத்திற்குக் கூடஸ்தனென் பானேன்? மேற்படி தூலமுதல் அவித்தைகாறும் சூக்குமம் சூக்குமமாக ஆராய்ந்து ஆராய்ந்து உட்சென்ற முடிவில் அதிசூக்குமமாய் வெளிப்பட்டு விரிந்த இரகசியப் பொருளாகலின் கூடஸ்தனெனவும், இது அவத்தாத்திரயவிலட்சணமாகலின் பிரத்தியகாத்ம சொரூபமெனவும் படும். இப் பிரத்தியகாத்ம சொரூபம் ஒவ்வொருவரது உள்ளத்தையன்றி இல்லை யெனப்படுமோ? படாததால்,

உத்தமவாத நூல்.

உள்ளஞ் சுயஞ்சோதி ஒவ்வொரு வர்க்குமெனி
னுள்ளபடி காணும்வகை யோராதே—கள்ளமதக்
கற்பனைய தாக்கியதைக் காணுவதோ நம்புலமை
சொற்கடங்கார்க் கேதுயர்ந்தோர் சொல்.

ஜீவகாருண்ணிய விளக்கம்.

சோதியு மின்னும்முள்ளஞ் சோதியா வோங்குதலைச்
சோதியா தேற்றன்மின் சொல்லொன்றைச்-சோதியொன்றே
மெய்யென்னல் சத்தியமே மெய்யலவே யேனையவை
பொய்பொய்பொய் பொய்பொய்பொய் பொய்.

பிரமகீதை.

இதயமா மிந்த விமல கோசத்தே
யிரசமாய் விளங்குநற் பிரமந்
துதயமே விடுமெச் சோதியே யெல்லாச்
சோதிக்குஞ் சோதியா வதுவும்

இதயமே நிகழு மிதனைமெய் கண்ட
விடத்தின்மற் றிதயநோ யெல்லாஞ்
சிதையுமை யுறவுந் தீருமெவ் வினையுஞ்
செய்யினுஞ் செய்தில னாமால்.

வேறு.

இலங்கிரவி யிந்துவனல் தாரைகைமி னெல்லாம்
நலம்பெற விளங்குவது ஞானவொளி கொண்டே
புலம்படு மனைத்தையு விளக்குபர போதம்
துலங்குவது தன்னுடைய சோதியத னாலே.

என்றருளியிருக்கின்றது. அவ்வவ் வுள்ளத்தின் கண்ணும் காலம் தேசம் வஸ்துக்களாக விடாது உதிக்கின்றதும், விளங்குகின்றதும், மறைகின்றதும் மறைந்தவை மீண்டும் அவ்வுள்ளமாகின்றதுமா யிருக்கின்றதால்

ஞானவாசிட்டம்.

எழுதுவோனும் எழுதிடமும் எதிர்காண் பொருளுமிலதாகி
வழுவிலாத விண்ணிடையே வந்துதோன்று மோவியந்தான்
பழுதின்மேவுந் தனைத்தானே பாராநிற்கும் பலபொறியும்
கழுவுதுயிலினலன்றி நனவான் மேவுங் கனவொக்கும்

என்று அருளியிருக்கின்றது.

சிந்தையானது வியாபக விளக்க வடிவமென்பதற்கு உதாரணம்.

ஞானவாசிட்டம்.

தானுகு மிக நொய்தா மாகாயத்தில்
சகத்திரளாஞ் சித்திரத்தைத் தானே கோட்டும்
ஆனுத வுலகமெலாந் தனது சோதி
யாதலினு லதற்குவே றயலொன் றில்லை

நீநானுஞ் சகபேத வடிவந் தானும்
நிற்கின்ற வதன்வடிவாய் நீங்கா தென்று
நானுவாம் பொருட் புணர்வா னடந்ததாகும்
நடக்க விடமிலாமையினு னடவா தாகும்—என்றும்,

பாடுதுறை.

பற்றற்று நின்றேமென் றாதேடா காளம்
பார்ப்பறப் பார்த்தோமென் றாதேடா காளம்
உற்றவுணர் வேயென் றாதேடா காளம்
உள்ளொளி யானேமென் றாதேடா காளம்
உள்ளது போதமென் றாதேடா காளம்
உலகமோக் காளமென் றாதேடா காளம்
வெள்ளவெளி யீதென் றாதேடா காளம்
வேதஞ் சொன் னவண்ண மூதேடா காளம்—என்றும்

அஞ்ஞான காரிய மனைத்து மறவிட்டு
விஞ்ஞான மானே மென்றுந் தீபற
வெளியாகி நின்றே மென்றுந் தீபற—என்றும்.

திருவிளையாடற் புராணம்.

பூதங்களல்ல பொறியல்ல வேறு
புலனல்ல வுள்ள மதியின்
பேதங்க ளல்ல யிவையன்றி நின்ற
பிறிதல்ல வென்று பெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச
வெளியென்ப கூடன் மறுகிற்
பாதங்க ணோவ வளையிந்த னுதி
பகர்வாரை யாயு மவரே—என்றும்.

தேவாரம்.

பாஞ்ச பூதிகத் துண்ணின்ற பண்பனை
ஆய்ந்து ஆய்ந்து அறிவா லறிந்தபின்
தேய்ந்து தேய்ந்து சிவமல்ல தில்லையென்
றோய்ந்து போன தென்னுள்ள முள்ளவே.

என்றுமருளிய மகா வாக்கியங்களையும் உற்றுணர்க.

உபாதி சகிதமாக நின்று நிகழும் எண்ணரிய உயிர்களது உள்ளமானது அதாவது தத்தம் சிந்தையானது வியாபகமாகவும் உபாதானமாகவும், விளக்கமாகவும், நித்தியமாகவும், சாக்ஷியாகவும் இருக்கின்றது சத்தியமான அனுபவமாயிருக்க அவ்வொவ்வோருயிரும் நான் நான் என்பதற்குப் பொருள் இதையன்றி யாதிருக்கின்றது? உயிர்கள் பலவாயினும் அவைகளுக்கு நானென்னும் இவ்வகம்பொருள் ஒன்றாயிருக்கின்றதல்லவோ? இவ்வொன்றை யல்லவோ எவ்வுயிரும் நான் நானென வழங்குகின்றன; அங்ஙனம் வழங்கும் இவ்வகம்பொருள் எவ்வுயிருக்கும் பொருத்தமுற்றிருக்கின்றதா லன்றோ,

ஞானவாசிட்டம்.

அகமகமென் றனைத்துயிரி னிடத்துமிருந்
தனவரத முரைப்ப தாகி
நிகழொளியா யான்மதத் துவமான
சொரூபத்தை நினைத்தல் செய்வாம்

திகழிதய குகையுறையுந் தேவதையை
விட்டயலே தெய்வந் தேடல்
மிகவரிய கவுத்துவத்தை யெறிந்து சிறு
மணிதேடும் வேட்கை போலாம்—என்றும்
தீவினையெல் லாமறுத்து மங்கல மெல்
லாமுதவுந் தேவ பூசை
யாவதெனக் கேட்டலுமே யருள் செய்வான்
தெய்வந்தான் யாதென் றேதில்
கேவலமே யரியல்ல வரனல்ல
பூதவுடற் கிடைத்த தல்ல
வோவுமன மன்றடியு முடியுமிலாச்
செயப்படா வுணர்வே தெய்வம்—என்றும்

அருளியிருக்கின்றது.

ஒவ்வோருயிரும் இவ்வகம்பொருளை அப ரோட்சமாகக்கொண்டு பலகற்பமும் பூசித்து அது வாகவேண்டுவது அவசியமாயிருக்கின்றதால்,

ஞானவாசிட்டம்.

தேகமுதற் பிரிவுகளாய்ச் சிறியனவாம் பொருள்களிலத்
தெய்வ முண்டோ
பாகமறப் பணிமையற வடிமுடிவற் றுளவுணர்வே
பரம போதம்
ஆகலினு லதுதெய்வ மருச்சித்தற் குரித்தாகும்
அறிவி லாத
மூகருக்கு வடிவுமுத லருச்சனையே யியல்பென்று
மொழியு மன்றே.

என்றும் அருளியிருக்கின்றது.

சுருதி யுத்தி அனுபவங்களால் அகம்பொருள் இங்ஙனமிருக்க நாம் ஒவ்வொருவரும் எக்கிருத்தியங்களையும், எப்போகங்களையும் அனுபவித்தற்கு நான் நான் என இவ்வாபாச போதங்கள் எழும்புந்தோறும் அவ்வாதாரப் பெரும் போதத்திலன்றோ வந்துவிழ வேண்டும்? அங்ஙனம் விழும் இந்நாட்டம் அபரோட்சத்தில் இது நான் இது நானெனவும், பரோட்சத்தில் அது நான் அது நான் எனவும் ஆதலால் அபரோட்சமாக விழுந்து பழகுபவரை அவர் போன்ருர் 'மக்கடாமே ஆறறிவுயிரே' என்றருளியிருக்கின்றனர். அன்றியும்

குறள்.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என மகா வாக்கியம் பிறந்திருக்கின்றது. இவற்ருல் அபரோட்சமாக அப்பியாசிப்பவர்களே மனிதரெனப் படுவரெனின் அவத்தாத்திரயங்கடந்து பரோட்சமாக அப்பியாசிப்பவர்கள் என்னவெனப்படுவர்? போலி மனிதரெனப் படுவர். இவ்வப்பியாசிகளே போலிமனிதரென்ருல் அவத்தாத்திரயங்களில் கைப்புருமலும், அயர்வுருமலும் பரோட்ச அப்பியாசத்துக்காவது கிஞ்சித்தும் இணங்காமலும் கல்விகேள்விகளிலேயே முற்றும் மிதந்திருப்பவர்கள் என்னவெனப் படுவரோ தெரிகிலம்.

ஆதலால் ஒவ்வொருவரும் நனவு, நினைவு, கனவுகளில் நாமரூபங்கள் நான் எனதாகத் தோன்றுந்தோறும் இவற்றை நான் எனதன்றென அகற்றியகற்றி மேற்படி ஆதாரப்பெரும் போதத்தில் அபரோட்சமாக விழாவிடினும், பரோட்சமாகவேனும், தத்தம் நாட்டம் விழுந் தழுந்த வேண்டுவதே திண்ணமாயிற்று.

இவ்வாராய்ச்சியின்கண் இதனினும் வேறு கூற வேண்டுவது யாமறிகிலமென்க.

விடயமுதல் இப்பொழுது இருப்பாகத் தேர்ந்த சாக்ஷிவரை விரிந்துவந்த ஆராய்ச்சியைத் தொகுத்து யூகித்தல்.

சத்தம் முதலிய ஐந்து விடயங்களும் எதற்குத் தோற்றுகின்றனவென்று ஆராய்ந்து பார்க்குங்கால் அவ்வைந்து விடயங்களையும் வேறாக உணர்ந்துவரும் ஐம்பொறிகளெனத் தேர்ந்தன. அதனால் அவ்வைம் பொறிகளும் அறிவாயிற்று.

அதன் பின் அவ்வைம் பொறிகளையும் ஆராய்ந்து பார்க்குங்கால், அவைகள் அறியாமையாய் முடிந்தன. அதன் பின் அறிவென்பது யாதென ஆராய்ந்து பார்க்குங்கால் மேற்படி பொறிகளை வேறாக உணர்ந்துவரும் அந்தக் கரணங்களெனத் தேர்ந்தன. அதனால் அவ்வந்தக் கரணங்கள் அறிவாயிற்று.

அதன் பின் அவ்வந்தக் கரணங்களை ஆராய்ந்து பார்க்குங்கால் அவைகள் அறியாமையாய் முடிந்தன. அதன் பின் அறிவென்பது யாதென ஆராயுங்கால் அவ் வந்தக் கரணங்களை வேருகக் கொண்டு உணர்ந்துவரும் சீவபோதமெனத் தேர்ந்தது. அதனால் சீவபோதம் அறிவாயிற்று.

அதன் பின் அச்சீவபோதத்தை ஆராய்ந்து பார்க்குங்கால் அஃது அறியாமையாய் முடிந்தது. அதன் பின் அறிவென்பது யாதென ஆராய்ந்து நாடுங்கால் ஓர் சாக்ஷி போதமெனத் தேர்ந்தது. அதனால் அச்சாக்ஷி போதமே அறிவாயிற்று.

அதன் பின் அச்சாக்ஷி போதத்தைச் சுருதி குரு சுவானுபவத்தால் ஆராய்ந்து நாடிப்பார்க்குங்கால் ஒளியை விளக்குதற்கு வேறோர் ஒளி இல்லாவாறுபோல் மேற்படி சாக்ஷியை விளக்கி உணர்தற்கு வேறோர் உணர்வு கிஞ்சித்து மின்றி, தான் மாத்திரமாக நின்று மேற்படி விடய முதல் சீவபோதமாகிய அவித்தை காறும் நிகழும் அறிவறியாமை அடுக்கு பேதங்களை ஒருங்கே தோய்ந்தும் தோயாதுமாய் அவை அனைத்திற்கும் சாக்ஷியாய் நின்று தன்னைச் சிற்பிரகாசமாயுணரும் உணர்வுவடிவே மேற்படி அறிவறியாமை ரகித அகம்பொருளாகவே முடிந்ததென்க.

இதனால் என்ன விளங்கிற்றென்றால் அறிவுக்குமேல் அறிவிருக்கின்றதென்னும் ஆகம பட்சத்தைப் பூர்வ பட்சமாக்கி மேற்படி விடய முதல் அவித்தைவரை விளங்கும் அறிவறியாமை அனைத்துள் ஒன்றேனும் தானல்லவெனவும், தன்னையன்றி அவற்றுள் ஒன்றேனும் இல்லையெனவுமாகித் தானே தானாயிற்றென்க.

தானே தானாயிருத்தல் இயற்கையானால், இடையில் அறிவறியாமை பேதம் வந்ததென்னவெனின், இஃது கயிற்றின்கண் அரவுபோல் தோற்றக்கூடிய தோற்ற சத்தி வருவானேனென வினவுவதுபோலா மென்க.

ஷை விடய முதல் சாக்ஷிவரையுள்ளன
வற்றிற்கு உதாரணம்.

உபநிடதம்.

சத்தமுத லைந்தினையும் பொறிகளறியும் பொறிக
டம்மைத்தானு
மொத்தகர ணமதறியுங் கரணத்தை யறியுமுயி
ருயிரைத்தானு
நித்தியமா யிருந்தறியுஞ் சாக்ஷியகண் டாகார
நீங்கிமேலா
மித்தனையும் பகுத்தறியு மறிவுவடிவாயிருப்ப
தியல்பதாமே-என்றும்

விடயமறிந் திடும்பொறிகள் விடயமாமோ
மிக்கபொறி யறிகரணம் பொறிக ளாமோ
அடையவறி சீவனந்தக் கரணமாமோ
அதனையறிந் திடுஞ்சாக்ஷி சீவனாமோ
தடையறவொன் றினையறியு மொன்று மேலாஞ்
சாக்ஷியையொன் றுலறியத் தருமோ தானு
மிடையறநின் றிலகுமெனி னதனைக் காண்டற்
கேதுண்டா மதுவாகி யிருந்து காணே.

பாடுதுறை.

ஆதிப் பிரமம் அறியாமை தன்னாலே
பேதித்துத் தோன்றிற் றென் றிம்பிலடி
பிறப்பிறப் பில்லையென் றிம்பிலடி.

ஈசுவரகீதை.

படிகந்தனி னிடையேபல நிறவைகவவ் வுருவாய்
வடிவந்தன தெனநின்றிடு மதுபோலறிவுருவு
முடிவொன்றுமில் பொருளெங்கணு முழுதும்மொளி யாயே
வடிவந்தொறும் வடிவந்தொறும் வேறுய்வீரும் வகையே.
ஆதலா லெல்லாமாகி நின்றது மறிவே வேறொன்
றோதிடக் கண்டதில்லை யுள்ளபே ரறிவை நீக்கி
ஏதமாம் பந்தமோடிவ் வுலகமு மிலையே பார்க்கில்
ஆதியாமறிவை மூடி யறியாமை மயக்கு மன்றே.
எனக் கூறியவற்றாற் காண்க.

துவம் பதார்த்த அனுபவ விளக்கம்
முற்றிற்று.

ஞானவாசிட்டம்.

பாலன் கதை.

அறிஞர்கள் மனது பிரமமேயெனல்.

முழுதுசத் தியுமாய்ப் புரணமா யென்று
முடிவறு பிரமமா வதுதான்
பழுதின்ஞா னிகடம் மனமலா தில்லைப்
பரமமா மிதிலிலா தில்லை
யெழுதருஞ் சத்தி யாவுமா யிலங்கு
மிவைகளோர் காலமொன் றுளதாம்
வழுவிலாப் பிரம முடையசிற் சத்தி
மறிதரு முடல்களிற் றோன்றும்.

இதுவுமது.

காற்றிலே யசைவுங் கல்லிலே திடமுங்
கனலிலே சூடும்வான் றனிலே
தோற்றலா மையுமன் னீரிலே நெகிழ்வுந்
தொலைவறு மாய்விலே மாய்வும்
ஊற்றமாம் விதையின் மரங்களும் போல
உள்ளுறை பிரமசத் திகடாம்
ஆற்றல்சால் கால தேசசித் திரத்தால்
அவனியிற் சாலிபோற் றோன்றும்.

[இதன் கருத்து.]

பிரமத்துக்கு அபின்னமான சிற்சத்தியின் உல்லாசமே விசித்திரமான சகமாகத் தோற்றுகின்றதாம்.

அசத்தைச் சத்தாகக் காணுதல்.

பரமமே யெங்கு மென்றுமுண் டாகும்
    பயின்மன னத்தினுன் மனமாம்
தரமறு பந்த முத்தியே ருலகாஞ்
    சத்திக ளனைத்துமாய் நிற்குந்
திரமறு தனையர்க் கன்னைசொற் கதைபோற்
    செப்பிய விவையெலாந் திரமாங்
கரமலர் முகிலே யென்றனு மந்தக்
    கதையினை யிராகவன் வினவ,

[இதன் கருத்து.]

சத்தின் ஆபாசமாகத் தோற்றுகின்ற பொய்யான சகம் அறிவின்மையால் சத்தாகப் பார்க்கப்படுகின்றதாம்.

இதற்கோர் கதை.

சித்தவஞ் சனையின் மூலமாங் கதையைச்
    செல்வனுக் கருந்தவ னுரைப்பான்
மெய்த்தகை விலாதோர் சிறுவனீ யன்னை
    விரும்பியோர் கதைவிளம் பென்னச்
சத்தியம் போல வெறும்பொய்யே யுரைப்பாள்
    தரணிபன் குமரரோர் மூவர்
சுத்தவீ ரமுநற் குணங்களுஞ் சிறந்தோர்
    சூனிய நகரிலே யுறைவோர்.

இதுவுமது.

மூவரி லிருவர் பிறந்தில ரொருவன்
    மூலமாங் கருவினு மில்லை
யாவதுங் கருதித் திரிபவர் விண்ணி
    லளவறு பழமரச் சோலை

மேவலு மதனிற் செழுங்கனி துய்த்து
 வெம்பசி தணிந்துமேற் சென்றார்
காவரு காக மூன்றுநன் னதிகள்
 கரைபொரு திரையொடுங் கண்டார்.

ஓடுநன் னதியி லிரண்டுநீ ரில்லை
 ஒன்றுவெண் மணலதா மிதனி
லாடிநீர் துளைந்து பருகினா ரந்தி
 யாகிமேல் வருநக ரடைந்தார்
வீடுமூன் றெதிர்ந்தா ரதிலிரண் டில்லை
 மேன்மரஞ் சுவரிலா தொன்று
கூடிய வவற்றிற் சுவரிலா வீட்டிற்
 குடிபுகுந் திருந்தனர் குமரர்.

ஒருவருங் காணா நகரிலே வெளிவீட்
 டுறைபவர் கனகபாத் திரமூன்
றருகுறக் கண்டா ரதிலிரண் டோடா
 மறவிலுந் தூளியா மொன்று
சொருபமில் கடத்திற் றுரோணமூன் றதனிற்
 றுரோணமூன் றகன்றுமிக் கிருந்த
பருவரி சியைத்தாஞ் சமைத்துவா யில்லாப்
 பனவரெண் ணிலர்க்குமுன் படைத்தார்.

அவரெலாம் நிரம்ப வுண்டபின் மிகுந்த
 தருந்தினர் வேட்டைக ளாடி
இவர்கண்மூ வருமங் கிருந்தன ரென்ன
 விளைமையா னம்பினன் சிறுவன்
புவனமு மிவ்வா றறிவிலோர் காண்பர்
 புகன்மன விரிவுசங் கற்பம்
விவரமா மிதனா லுலகமா மிதனை
 விடுதிரு விகற்பமா யிடுநீ.

இதன் சாரமும் கருத்தும்.

1. அத்துவித ஆன்ம சொரூபத்தைத் தரணிபன் என்றும்,
2. அதன் பிரதிபலனமான சீவேஸ்வர சகங்களைக் குமாரோர் மூவர் என்றும்,
3. மித்தையாப் பிரகிருதியில் வசிப்பவர்களைச் சூனிய நகரிலே உறைவோர் என்றும்,
4. சீவேஸ்வரர் இரண்டும் உதித்திலர் என்பதை மூவரிலிருவர் பிறந்திலர் என்றும்,
5. உலகம் கருவிலுமில்லை யென்பதை ஒருவன் மூலமாங் கருவினு மில்லை என்றும்,
6. சிதாகாசத்தி லென்பதை விண்ணில் என்றும்,
7. மனோராச்சியத்திலுண்டான அளவற்ற விடய சுகானுப வத்தை அளவறு பழமரச்சோலை மேவலு மதனிற் செழுங்கனிதுய்த்து என்றும்,
8. மூன்று அவத்தைகளை மூன்று நன்னதிகள் என்றும்,
9. நனவு கனவுகளிற் சாரமில்லை யென்பதை ஒடு நன்னதியி லிரண்டு நீரில்லை என்றும்,
10. சூனியமான சுழுத்தியை ஒன்றுவெண் மணலதாம் என்றும்,
11. இவ்வவத்தையில் அழுந்திச் சுகிப்பதை இதனிலாடி நீர் துளைந்து என்றும்,
12. இனிவரும் சங்கற்ப வசமாவதை மேல்வரு நகரடைந்தார் என்றும்,
13. சீவேஸ்வர பிரமசாக்ஷியை யறிந்தார்களென்பதை வீடு மூன் றெதிர்ந்தார் என்றும்,
14. அதில் சீவேஸ்வரரில்லை யென்பதை அதிலிரண்டில்லைஎன்றும்,
15. நிராதாரமான பிரமத்தைச் சுவரிலா ஒன்று என்றும்,
16. அப்பிரமாதாரத்திலிருப்பவர்களை வீட்டிற் குடிபுகுந்திருந்தனர் என்றும்,

17. அகோசரமான சிதாகாசத்தி லுறைபவரை ஒருவருங்காணு வெளிவீட்டுறைபவர் என்றும்,

18. சச்சிதானந்த தரிசனத்தைக் கனகபாத்திர மூன்றநுதறக் கண்டார் என்றும்,

19 அதில் சத்துச்சித்தின் தடிப்பை அதிலிரண்டோடாமென்றும்,

20. ஆனந்தத்தினுட்பத்தை அறவினுந் தூளியாம் ஒன்று என்றும்,

21. உருவமற்ற ஆனந்தமயத்தை ஸ்வரூபமில் கடத்தில் என்றும்,

22. காமாதிகளைத் துரோணமூன்று என்றும்,

23. இவையாறும் நசித்தவிடத்தில் சேடித்திருந்த சத்துவமனதை அகன்று மிக்கிருந்த பருவரிசி என்றும்,

24 அம்மனதை அனுபவத்தில் கரைத்தலைச் சமைத்து என்றும்,

25. அதை மகா மவுனத்தினுல்லாசத்திற் சேர்த்தலை வாயிலாப் பனவரெண்ணிலர்க்கு மூன் படைத்தார் என்றும்,

26. அவ்வருட்பிரசாதம் பெற்றதை மிகுந்ததருந்தினர் என்றும்,

27. சகச நிஷ்டையில் எதிரறச் சஞ்சரித்திருக்கின்றார்களென்பதை வேட்டைகளாடி இவர்கள் மூவருமங்கிருந்தனர் என்றுங் கூறினர்.

முக்கியபயன்.

பிரமத்தில் ஆரோபிதமாகத் தோற்றின கற்பனைகளை நீக்கி அப்பிரமவடிவமான எதார்த்தமாய்ச் சஞ்சரிக்க வேண்டுமென்பதாம்.

ஞானவாசிட்டம் பாலன்கதை

முற்றிற்று,

திருச்சிற்றம்பலம்.

[illegible]
[illegible] உ

திருச்சிற்றம்பலம்.

பிள்ளைத்திருநாமம்.

சப்பாணிப்பருவம்.

வெறிகமழ் திருவடி மலரென் றலைமிசை வைத்தரு ளித்தாவி
விடயமுண் விழிமுதல் புலனவை யெழலற விட்டி ரெனப்பேசி
மறிகட லலையென வுறுமனன் மலைவற வைத்தொ ரிமைப்போதின்
வடிவறி வெனவறி வகைசெய்த வறிவுறு குற்ற மதைக்கூறி
யறிவறி பொருளறி பவனென நிகழ்தரு மூப்பரி சைத்தீர
வறிபொரு ளறிவினி னறிவறி பவனிவன் முற்றறி விற்கூடக்
குறியறு குறிகுறி யெனவரு ளியவிறை கொட்டுக சப்பாணி
குருபர பரசிவ சிவகர கரமலர் கொட்டுக சப்பாணி.

துஞ்சல் விழித்தல் பிறத்த லிறத்தல் சுருங்கல் விரித்தலெனச்
சொல்லும் விதங்களு மற்றள வற்ற சுகோததி யாய்நினையு
நெஞ்சு நினைப்பு மறப்பற நின்மல நிட்களமா யறிவாய்
நிற்ப விருப்ப கிடப்ப நடப்பன நிற்பிறி தற்றொருகா
லெஞ்சுத லின்றிய விவ்வுரு வென்றுண ரவ்வுரு வுற்றுணர்வா
ரெவ்வள வவ்வள வாகிய நின்னுரு வென்னுரு வாயிடவென்
குஞ்சியின் வைத்த துணர்ப்பது மங்கொடு கொட்டுக சப்பாணி
கும்பிடு மன்பர்த மென்புரு கும்பர கொட்டுக சப்பாணி.

சிற்றிற்பருவம்.

பேசக்கரு தப்பட் டவனென்றனை யாளும்
பித்தன்குறி கேடன் பெண்ணுனலி யல்லான்
றேசத்திறை யொன்றிற் றட்டானுற வற்றான்
சென்மப்பகை யன்றற் சேர்வாருயி ருண்பான்
கூசப்படு வார்நான் மறையன்குண னில்லான்
குருவற்றவ னிங்கோ ருருவற்றவ னென்றே
யேசித்தில மெஞ்சிற் றில்லஞ்சிதை யேலே
யெமையாளுடை யாய்சிற் றில்லஞ்சிதை யேலே.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

விளம்பரம்.

மாயாவிசித்திரத்தோற்றம்.

இது வசிட்டமுனிவர் ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசித்தருளிய ஞானவாசிட்டத்தினது சாரசங்கிரகம்.

லீலை கதையும், புசுண்டர் கதையும் அடங்கியது.

இதை ஊன்றிப்படித்துணர்வார் உலகம் முதலியன ஒரு மித்தை எனக்கண்டறிந்தும் நித்தியமான தத்துவஞான உதயம் பெற்றுய்வார் என்பது திண்ணம். சாதாரண ஜனங்களும் படித்துணருமாறு தெள்ளிய நடையில் எழுதப்பெற்றுள்ளது. விலை அணா 0—3—0.

ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் அருளிச் செய்த

கைவல்ய நவநீதம் மூலம்.

பாக்கெட் சைஸ்

சுத்தப்பதிப்பு.

இதில் வைராக்கிய டிண்டிமம், மோக்ஷ சாதனக் கிரமம், பிரமசித்தி அகவல், நிர்க்குண பூசை, சொரூபானு சந்தான துதி, பிரம வித்துக்களின் மகிமை, விவேக சட்கம், முதலியன அடங்கியுள்ளன. விலை அணா 0—4—0

அறிவானந்த நெஞ்சறிவுறுத்தல்.

இதைத் தேர்ச்சி அடைந்த மோட்ச இச்சை யுடையவர்கள் ஊன்றிப்பார்ப்பார்களானால் அவர்கள் அயலின்பத்தை மறந்து அறிவின்பத்தை அடைந்து பிறவிக்கடலைக் கடப்பார்களென்பது திண்ணம். இதன் விலை அணா 2.